<u>சாதாரண கூட்டம்</u>

கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் நாள் புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30.09.2020 | பொருள் எண் 1<br>நகராட்சி ஆணையர் அவர்களது ஆகஸ்ட் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | தீர்மானம் எண்:- 763 ஏற்கப்பட்டது |
| 30.09.2020 | பொருள் எண் 2<br>நகராட்சி பொறியாளர் அவர்களது ஆகஸ்ட் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | தீர்மானம் எண்:- 764 ஏற்கப்பட்டது |
| 30.09.2020 | பொருள் எண் 3<br>இயக்குனர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 92/2016/அ2 நாள் 16.03.2016ன்படி, தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அலுவலகத்திற்கு இந்நகராட்சிக்கான 2020-2021 ஆம் ஆண்டிற்கான பங்குத் தொகை ரூ.20,000/- செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிய அலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 26/2015/பி1) | தீர்மானம் எண்:- 765 ஏற்கப்பட்டது |
| 30.09.2020 | பொருள் எண் 4<br>உதவி இயக்குனர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை திருவாரூர் கடிதம் ப.வெ.எண்.11/அ1/2020 நாள் 14.08.2020ந் தேதிய கடிதத்தில் 2018-2019 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.84,441/- செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2018-2019 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.84,441/- சம்மந்தப்பட்ட அரசு தலைப்பில் செலுத்திடவும், அதற்கான செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண. 1813/2015/பி1) | தீர்மானம் எண்:- 766 ஏற்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30.09.2020 | பொருள் எண் 5<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு ஓட்டுனர் எஸ்.தனபாலன் அவர்களின் 11.09.2020ன் கடிதத்தின்படி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 50 X 2638 வாகனத்திற்கு 29.01.2020 உடன் இன்சூரன்ஸ் முடிவடைந்து விட்டதால் தற்போது தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் நிறுவனத்திடமிருந்து வாகனத்தை புதுப்பிப்பதற்கு ரூ.18,610/-பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்திற்கு இன்சூரன்ஸ் ஓராண்டு புதுப்பிப்பதற்கு தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு ரூ.18610/-ஐ செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.523/2020/எச்1) | தீர்மானம் எண்:-<br>767 ஏற்கப்பட்டது |
| 30.09.2020 | பொருள் எண் 6<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு இந்நகராட்சி பகுதியில் உள்ள, மேல்கொண்டாழி மற்றும் பழைய நகராட்சி அலுவலகத்தில் உள்ள இரண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் மூலம் விநியோகம் செய்யப்படும் குடிநீரினை பகுப்பாய்வு செய்யவும், மேற்கண்ட குடிநீர் பகுப்பாய்வு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருவாரூர் ஆய்வு கூடத்தில் பகுப்பாய்வு செய்து, உரிய தர அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை (ம) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அலுவலகங்களுககு அனுப்ப வேண்டியுள்ளதால், மேற்படி குடிநீர் பகுப்பாய்வு அறிக்கை பெற ஒரு மாதிரிக்கு ரூ.1180 வீதம் ஒரு வருட காலத்திற்கு பகுப்பாய்வு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.2216/2009/இ1) | தீர்மானம் எண்:-<br>768 ஏற்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30.09.2020 | **பொருள் எண் 7**<br>இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்காக 23 பணியாளர்கள் தனியாரிடமிருந்து பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்படி நிறுவனத்துடன் உரிமக் காலம் எதிர்வரும் 31.10.2020 உடன் முடிவடைவதால் தொடர்ந்து 01.11.2020 முதல் 31.10.2021 வரை ஒரு வருட காலத்திற்கு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்காக 23 டெங்கு தடுப்பு பணியாளர்களை நியமித்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 17.09.2018ந் தேதிய கடித ந.க.எண். 13433/2018/ஜெ1 ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கவும், எதிர்வரும் காலம் மழைக்காலமாக இருப்பதாலும், பொது சுகாதாரத்தை பாதுகாக்கவும், 23 பணியாளர்களுக்கு திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலை விகிதத்தின்படி ஒப்பந்த அடிப்படையில் 12 மாத காலத்திற்கு பணியாளர்களை ஒப்பந்தம் செய்யவும், அதற்காக தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் ஆகும் உத்தேச செலவினமான ரூ.45,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 484/2020/எச்1) | **தீர்மானம் எண்:-**<br>769 **ஏற்கப்பட்டது** |

30.09.2020

பொருள் எண் 8

இந்நகராட்சி கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கு 30.09.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் மூன்று நிறுவனங்களிடமிருந்து கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பொருட்களின் விபரம் | ஒரு பொருளின் விலை ரூ. |
|---|---|---|---|
| 1 | பரிஷித் டிரேடர்ஸ் திருச்சி | முகக்கவசம் (disposable) | 9.45 |
| | | முகக்கவசம் (Reusable) | 10.5 |
| | | லைசால் | 177 |
| | | சானிடைசர் | 531 |
| | | PPE Kit | 498 |
| 2 | ஆர்.எஸ்.ஏ. டிரேடர்ஸ் | முகக்கவசம் (disposable) | 10.46 |
| | | முகக்கவசம் (Reusable) | 11.5 |
| | | லைசால் | 180 |
| | | சானிடைசர் | 550 |
| | | PPE Kit | 520 |
| 3 | கமலா டிரேடர்ஸ் | முகக்கவசம் (disposable) | 11.50 |
| | | முகக்கவசம் (Reusable) | 12 |
| | | லைசால் | 185 |
| | | சானிடைசர் | 555 |
| | | PPE Kit | 525 |

அலுவலக குறிப்பு

1. வரப்பெற்ற மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1-ல் உள்ள நிறுவனம் வழங்கியுள்ள குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினமான ரூ.2,00,000/-க்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி 29.09.2020ல் பெற்றதை மன்றம் ஏற்கலாம்.
3. பொது நிதியில் செலவினத்தை மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 0335/2020/எச்1)

தீர்மானம் எண்:-
770 ஏற்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 30.09.2020 | **பொருள் எண்** 9<br>மாவட்ட ஆட்சித்தலைவர் திருவாரூர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் எதிர்வரும் காலம் மழைக்காலமாக இருப்பதால் டெங்கு, மலேரியா, சிக்குன்குனியா மற்றும் இதர கொசுவினால் ஏற்படக்கூடிய தொற்றுநோய்கள் பரவ வாய்ப்பு உள்ளது. எனவே மேற்படி நோய்களை உருவாக்கும் கொசுக்களை கட்டுப்படுத்த தேவையான மருந்துகள், மற்றும் இயந்திரங்களை தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி பகுதியில் தற்போது டெங்கு நோயினை பரப்பும் கொசுக்களை கட்டுப்படுத்த 23 டெங்கு தடுப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு தேவையான பைரித்திரியம் 40 லிட்டர், அபேட் மருந்து 40 லிட்டர் மற்றும் சிறிய புகைபோக்கி இயந்திரத்திற்கு தேவையான எரிவாயு சிலிண்டர் 80 எண்ணிக்கை பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 454/2019/எச்1) | **தீர்மானம் எண்:-**<br>771 **ஏற்கப்பட்டது** |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி